வகுப்புவாரியாக பதவி அளித்தல் என்ற ஆணை இருந்த போது, தனக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய உயர்வு கிடைக்காமல் போய்விட்டது என்று அரசாங்கத்திற்கு அவர் முறையிட்டார். அவருடைய தகுதி வாய்ப்பைக் கருதி 6 மாதத்திற்கு அவருக்கு மறுநியமனம் கொடுக்கப்பட்டிருக்கிறது. சில வேளையில் சிலருடைய சேவை தேவை என்று அரசாங்கம் கருதுவதால், விதிவிலக்குக் கொடுத்து இது போன்ற நியமனம் செய்யப்படுகிறது.

Omni buses.

*78. *Q.*—THIRU V. THANGAPANDIAN : Will the Hon. the Minister for Co-operation be pleased to state :

(*a*) whether the income of the Tamil Nadu State Transport Government Department is affected due to the grant of licences to a large number of Omni buses and Tourist buses in Tamil Nadu ;

(*b*) if so, the action taken by the Government in this regard ; and

(*c*) whether the Government are aware of the plying of Tourist buses from Madras to Madurai daily during nights ?

சிர்வசதிப் பேருந்துகள்.

திரு. வி. தங்கபாண்டியன் : மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ்நாட்டில் மிக அதிகமாக Omni bus, Tourist bus கள் அனுமதிக்கப்பட்டிருப்பதால் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்தின் வருமானம் பாதிக்கப்படுகிறதா ?

(இ) ஆம், எனில் அது சம்பந்தமாக அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன ?

(உ) இரவு நேரங்களில் சென்னையிலிருந்து மதுரைக்கு தினமும் Tourist bus போக்குவரத்து நடைபெறுவதை அரசு அறியுமா ?

THE HON. THIRU SI. PA. ADITANAR : (*a*) Yes.

(*b*) All Regional Transport Officers have been instructed not to grant fresh permits for omni buses indiscriminately but to take into consideration the extent to which additional contract carriages may be necessary or desirable in public interest. Four units of flying squads have been sanctioned to check intensively the misuse of omni buses.

(*c*) Certain cases of plying of tourist buses in the night were detected and charged.

திரு. வி. தங்கபாண்டியன் : தலைவர் அவர்களே, தினமும் மதுரையிலிருந்து சென்னைக்கும், சென்னையிலிருந்து மதுரைக்கும் இதுபோன்ற பஸ்கள் வாடிக்கையாகச் சென்று கொண்டிருக்கின்றன. அதில் சட்டமன்ற உறுப்பினர்களே கூட, குழுத் தலைவரை நியமித்து நாங்கள் மதுரைக்கு இன்னார் தலைமையில் உல்லாசப் பயணம் செய்கிறோம் என்று எழுதிக்கொடுத்து விட்டு பயணம் செய்கிறார்கள். இவைகளுக்காக சென்னையிலும் மதுரையிலும் பெரிய விளம்பரங்கள் செய்து பிரயாணிகள் சேர்க்கப்படுகிறார்கள். இதனால் அரசுத் துறைக்கு பெருத்த நஷ்டம் ஏற்படுகிறது. இது போன்ற நடவடிக்கைகளை உடனடியாகத் தடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : ஆம்னி பஸ்கள் ஓடுவதால், அரசுத் துறைக்கு மட்டுமல்ல, தனியார் துறைக்கும் கூட நஷ்டம் ஏற்படுகிறது. என்பதை இந்த வினாவிற்கு பதில் அளிக்கும் போது (அ) பகுதிக்கு விடையாக "எஸ்" என்று தான் கூறியிருக்கிறேன். இதைக் கட்டுப்படுத்த நாளைய தினம் நான் இந்த அவைக்குக் கொண்டுவர இருக்கிற தீர்மானம் இப்படிப்பட்ட தவறுகளை நீக்க உதவும் என்று கருதுகிறேன்.

[27th January 1970

திரு. டி. கே. சுப்பையா : தலைவர் அவர்களே, மக்களுடைய பிரயாணம் அதிகரித்ததன் காரணமாக, மக்கள் கஷ்டப்படுவதன் காரணமாகத் தான் ஆம்னி பஸ்களை ஆதரிக்கிறார்கள். அதைத் தவிர்க்க அரசாங்கம் அந்தத் துறையில் தானே சர்வீஸ்களை எடுத்து நடத்த முன்வருமா ?

மாண்புமிகு திரு சி. பா. ஆதித்தனார் : நண்பர் ஒரு வேளை அரசாங்கம் "லக்ஸ்சுரி" பஸ்களை ஓட்ட முன்வருமா என்று கேட்பதாகக் கருதுகிறேன். அப்படியே ஓட்டலாமா என்ற எண்ணமும் இருந்தது. ஆனால் "லக்ஸ்சுரி" பஸ் ஓட்டினால், உயர்ந்தவர்களுக்கு என்று தனியான பஸ்களும், குறைந்த கட்டணம் கொடுப்பவர்களுக்கு என்று தனியான பஸ்களும் ஓட்டுவது முறையாகாது என்று கருதுகிறோம்.

திரு. எம். எத்திராஜுலு : இப்போது அதிக ஜனநெருக்கடி காரணமாக ரெயிலில் கூட பிரயாணம் செய்ய இடம் கிடைப்பது அரிதாக இருக்கிறது. இரவில் பிரயாணம் செய்ய சர்க்கார் பஸ்கள் சில இடங்களுக்குத் தான் போடப்பட்டு இருக்கின்றன. எனவே தான் தனியாருடைய பஸ்கள் இப்போது சேலத்திலிருந்து சென்னைக்கு வருகின்றன. அதே போல் இரவு நேரத்தில் பங்களூரிலிருந்து சென்னைக்கு வருகின்றன. இப்படி பஸ்கள் வருவது ஜனங்களுக்குக் கொஞ்சம் சௌகரியமாக இருக்கிறது. ஆகவே சர்க்கார் மற்ற ஜில்லாக்களுக்கும் இரவில் போகிற பஸ்களை விடும்வரை தனியார்களுடைய இந்த பஸ்களை அனுமதித்து இவைகளின் மீது நடவடிக்கை எடுக்காமல் இருக்குமா ?

மாண்புமிகு திரு சி. பா. ஆதித்தனார் : ஆம்னி பஸ்களை—அல்லது சுற்றுலா பேருந்துகளைத் தடுப்பது என்பது அரசாங்கத்தின் தற்போதைய நோக்கமல்ல. நாளைய தினம் சட்ட சபைக்கு ஒரு தீர்மானம் கொண்டு வருவதாகச் சொன்னேன். அந்தத் தீர்மானத்தைப் பார்த்த பிறகு, தடுப்பது அவசியம் இல்லை என்பது தெரியும். ஆம்னி பஸ்களுக்கும் ஏனைய பஸ்களுக்கும் உள்ள பெரும் போட்டியைத் தவிர்க்க அந்தத் தீர்மானம் அனுகூலமாக இருக்கும் என்று தான் அதைக் கொண்டு வர இருக்கிறேன்.

திரு. ஆர். சாம்பசிவம் : அரசாங்க மாடி பஸ்களில் ஒரு முறை ஏறியவர்கள் மறுமுறை ஏற விரும்புவது இல்லை என்பது சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு சி. பா. ஆதித்தனார் : மாடி பஸ்களை அரசு ஓட்டிக் கொண்டிருக்கிறது. அது ஒரு சோதனை முறையில், பரீட்சார்த்த முறையில் தான் ஓட்டிக்கொண்டிருக்கிறது. தற்சமயம் 12 அல்லது 13 பஸ்கள் தான் ஓடிக்கொண்டிருக்கின்றன. அந்த பஸ்களில் சில சீர்திருத்தங்கள் செய்யப்பட வேண்டியிருக்கிறது. அந்தச் சீர்திருத்தங்களுடன் மாடி பஸ்களை ஓட்டுவது தற்கால நாகரீகத்திற்கு உகந்ததாக இருக்கும். மற்ற நாடுகளில் எப்படி வசதிகள் இருக்கின்றனவோ அவைகளை அனுசரித்து சீர்திருத்தம் செய்து ஓட்டுவதாக எண்ணம் இருக்கிறது.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் : மதுரையிலிருந்து சென்னைக்கு வரும் ஆம்னி பஸ் கம்பனிக்காரர் ஒருவர் நல்ல முறையில் நடத்துகிறார் என்று சொன்னாலும்கூட, இரவில் மதுரையில் 8 மணிக்குப் புறப்பட்டு காலையில் 4 மணிக்கு எல்லாம் இங்கே சென்னைக்கு அந்த பஸ் வந்துவிடுகிறது. 8 மணி நேரத்தில், 9 மணி நேரத்தில்-வழியில் ஒரு 15 நிமிஷம் ஒரு இடத்தில் நிறுத்துகிறார்கள்-அந்த 300 மைல் தூரத்தை சரிகட்டிக்கொண்டு வந்துவிடுகிறார்கள் என்று இருக்கிறபோது, கிட்டத்தட்ட ஒரு மணிக்கு 60 மைல் வேகத்தில் வருகிறார்கள் என்ற அச்சத்தைத் தெரிவித்தார்கள். ஆகையால் அவ்வளவு துரிதமாக வராமல் கொஞ்சம் துரிதத்தைக் குறைக்கும் படியான நிலைமையில், அவர்களுக்கு டைமிங்ஸ் போட அரசு ஏதாவது ஏற்பாடு செய்ய முன்வருமா ? அதே சமயத்தில் உயர்திரு சாம்பசிவம் அவர்கள் சொன்னமாதிரி மாடி பஸ்களில் திருப்தியாக உட்கார இடம் சௌகர்யமாக இல்லை என்ற அபிப்பிராயமும் இருக்கிறது. இதையும் அரசாங்கம் கவனிக்குமா ?

27th January 1970]

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : ஆம்னி பஸ்களுக்கு நேரம் குறிப்பிடுவதுபற்றி உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். ஆம்னி பஸ்களுக்கு நேரம் என்பது குறிப்பிடப்படுவதில்லை. ஆகையால் தான் அதிகமான போட்டியும் ஏற்படுகிறது. மாடி பஸ்களைப்பற்றி சீர்திருத்தம் செய்ய • வேண்டிய நிலை இருந்து வருகிறது என்று ஒத்துக்கொள்ளுகிறேன்.

MR. CHAIRMAN : The question relates only to the income of the State Transport.

திரு. கே. ராஜாராம் : அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கும்போது 4 பிளையிங் ஸ்குவாடு நியமித்து, ஒற்றர்களாக இருந்து இதைக் கண்டு பிடிக்க ஏற்பாடு செய்திருப்பதாகச் சொன்னார்கள். அதற்கு அவசியமே இல்லை. இது பகிரங்கமாக நடக்கிறது. போர்டு போட்டுக்கொண்டே நடத்துகிறார்கள். மதுரையில் இருந்து ஈரோட்டுக்கு இத்தனை மணிக்குப் போய்ச் சேரும். மதுரையிலிருந்து இத்தனை மணிக்குப் புறப்பட்டு கோவைக்கு இத்தனை மணிக்குப் போய்ச் சேரும் என்று போர்டு போட்டு பிரயாணிகளை ஏற்றுகிறார்கள். நமது ரீஜனல் டிரான்ஸ்போர்ட்டு ஆபீசரின் கட்டுப்பாட்டின் கீழ் லைசென்ஸ் பெற்று டூரிஸ்ட் பஸ்களை நடத்துகிறார்கள். இந்த லைசென்ஸ் விதிகளில் இந்த மாதிரியான விதிகளைப் புறக்கணித்து தவறாகச் சர்க்காரையும் ஏமாற்றி, சர்க்காருடைய பஸ்களின் வருமானத்தையும் பாதிக்கும்படியான நிலைமைகள் இருந்து வருகின்றன. இப்போது உள்ள சட்டப்படி இதன் மீது நடவடிக்கை எடுக்க இடம் இல்லையா? இடமிருந்தால் ஏன் கவனிக்காமல் விட்டுக்கொண்டிருக்கிறார்கள்? பகிரங்கமாக ரயில்வே ஸ்டேஷன் முன்னால் இருந்தே ஆட்களை ஏற்றுகிறார்கள். இதற்கு மாற்றாக சர்க்காருடைய பஸ்களை அதிகமாக விடுவதுபற்றி ஏன் யோசிக்கக்கூடாது? மதுரைக்கும் சென்னைக்கும், சென்னைக்கும் திருச்சிக்கும், சென்னைக்கும் ஈரோட்டுக்கும், ஈரோட்டுக்கும் கோவைக்கும் இடையே தான் இந்தப் போட்டி அதிகமாக இருக்கிறது. எனவே அரசாங்கம் இந்த இடங்களுக்கு எல்லாம் இன்னும் கொஞ்சம் அதிகமான பஸ்களை விடுவதைப்பற்றி ஏன் யோசிக்கக்கூடாது?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : அரசாங்கம் அதிகமான பஸ்களை விடுவதற்கு முன்னால் ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். இந்த ஆம்னி பஸ்களில் பெரும்பாலானவை இரவில் தான் ஓடுகின்றன. அதற்கு ஒப்பாக அரசு பஸ்களை ஓட்டுவதாக இருந்தால், அந்த மாடி பஸ்களில் சில சீர்திருத்தங்களைச் செய்ய வேண்டியது அவசியமாக இருக்கிறது என்பதை அரசு உணர்கிறது. எனவே தான் பிரயாணிகளுக்கு அதிக வசதி செய்து கொடுத்து ஓட்டுவது என்ற முடிவுக்கு வந்திருக்கிறோம்.

சட்டத்தைப்பற்றிச் சொன்னார்கள். சட்டத்தில் ஓட்டை இருக்கிறது. உதாரணமாக 2-வது பிரிவு, 3-வது உட்பிரிவில் அதாவது மோட்டார் வெகிகிள்ஸ் ஆக்டில் எப்படி சொற்கள் உபயோகிக்கப்பட்டிருக்கின்றன என்றால், "Notwithstanding the fact that the passenger may pay separate fare" என்றிருக்கிறது. தனித்தனியாக ஆட்களை ஏற்றுவதற்கு ஆம்னி பஸ்களை ஓட்டுகிற விதிகளில் இடம் இருக்கிறது. அதையும் திருத்த வேண்டியிருக்கிறது. சட்டத்தைத் திருத்த காலதாமதமாகும். எனவே அதற்கிடையில் தனியாக ஒரு தீர்மானம் கொண்டுவருவதாக இருக்கிறோம்.

MR. CHAIRMAN : Now the time is up. To-day we have taken full one hour for questions. Questions are over.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]